ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2073/39 - 2018 මැයි මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.05.31

*2073/39 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு ஜாஎல மற்றும் ஏகல கழிவு நீர் தொகுதியை நீடிக்கும் கருத்திட்டத்தின்கீழ் 09 ஆம் இலக்க நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2018, ஏப்பிறல் 23,
5/2/2/1362.

**அட்டவணை**

கம்பஹா மாவட்டத்தில், ஜாஎல பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 191, கநுவன கிராம அலுவலர் பிரிவில், ஜாஎல கிராமத்தில் அமைந்துள்ள முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 24.75 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

| | | |
|---|---|---|
| வடக்கு | : | தரிசு நிலம் ; |
| கிழக்கு | : | மினுவான்கொடை வீதி ; |
| தெற்கு | : | சதொச உரிமை கோருகின்ற காணி ; |
| மேற்கு | : | வாகன விற்பனை நிலையம் மற்றும் வீடு. |

காணிக்கு உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் : திரு. யூசுப் (முகவரி தெரியாது).

06‑659

திருத்தம்

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1984/19 மற்றும் 2016.09.13 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள எல்லைகள் கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்*
*அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*இல. 35, "லக்திய மெதுர", புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2018, ஏப்பிறல் 23,*
*5/2/1/1221.*

| | | |
|---|---|---|
| வடக்கு | : | நீரோடை மற்றும் அப்துல் கபூர் முஹம்மட் வசீர் உரிமை கோருகின்ற கலுகலதென்ன வத்த ; |
| கிழக்கு | : | அப்துல் கபூர் முஹம்மட் வசீர் உரிமை கோருகின்ற கலுகலதென்ன வத்த மற்றும் வீதி (பிரதேச சபை) ; |
| தெற்கு | : | வீதி (பிரதேச சபை) மற்றும் அரசு உரிமை கோருகின்ற கலுகலதென்ன வத்த ; |
| மேற்கு | : | அரசு உரிமை கோருகின்ற கலுகலதென்ன வத்த. |

*06- 660*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.